செ.வெ.எண்.74 நாள்.25.10.2017.

**திருநெல்வேலி பாளையங்கோட்டை ஆயுதப்படை காவலர் குடியிருப்பு பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் – டெங்கு கொசு புழு கண்டறியப்பட்ட புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு சீல் வைக்கவும், அபராதம் விதிக்கவும் உத்தரவிட்டார்.**

---------

திருநெல்வேலி பாளையங்கோட்டை ஆயுதப்படை காவலர் குடியிருப்பு பகுதியில் மொக தூய்மை பணிகள் மற்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.10.2017) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பகுதியில் மாநகராட்சி மூலம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி, டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் மெகா தூய்மை பணி ஆகிய பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆயுதப்படை காவலர் குடியிருப்பு பகுதி, காவலர் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்பு பகுதிகள், காவலர் குடியிருப்பு பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி, உதவி ஆணையர் குடியிருப்பு பகுதி, காவலர் மருத்துவமனை பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். காவலர் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்பு பகுதியில் பல்வேறு இடங்களில் டெங்கு கொசு புழுக்கள் உள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், அப்பகுதி தூய்மை இன்றி குப்பைகளும், கட்டுமான பொருட்கள் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாகும் நிலையில் உள்ளதையும், கொசு புழுக்கள் உள்ளதையும் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தூய்மை மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் மெத்தனமாக இருந்த கட்டட ஒப்பந்ததாரருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்க மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வரும் ஒரிசா மாநில தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதிக்கு சென்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினரும் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வை இந்தியில் தெரிவித்தார்.

தொடர்ந்து அருகிலுள்ள செயின்ட்ஸ் பால்ஸ் சாலை பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்த போது, மூன்றாவது தளத்தில் பல்வேறு இடங்களில் டிரம், தொட்டி, பிளாஸ்டிக் வாளி உள்ளிட்டவைகளில் கொசு புழுக்கள் அதிகளவில் இருப்பதை நேரில் கண்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கட்டட அனுமதியை ரத்து செய்யவும், கட்டடத்திற்கு சீல் வைக்கவும், உரிமையாளருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், பாளை மண்டல மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு.தமிழரசி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.